| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>சந்திரசேகர் | அ.வ.எண். 198/2021 | 13.06.2024 |

குறுக்கு விசாரணை

1) நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரி என்னவென்றால் எனது பெற்றோர் மற்றும் சகோதரி இருக்கிறார்கள், நான் சென்னையில் வேலை செய்து வருவதால் சென்னையில் குடியிருந்து வருகிறேன். எனது தந்தை மேற்படி எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கும் எனது தந்தைக்கும் சுமூகமான பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் பேச்சுவார்த்தை உள்ளது ஆனால் சுமூகமான பேச்சுவார்த்தை இல்லை. அமுதா, கவிதா என்னுடன் தான் வசித்து வருகிறாரா என்றால் அமுதா கரூரில் வசித்து வருகிறார், கவிதா பிரச்சனை காரணமாக பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் வசித்து வருகிறார். இந்த வழகது எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகபிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்குரையில் இந்து கூட்டுக்குடும்ப பூர்வீக சொத்து என்று குறிப்பிட்டுள்ளது சரியானதுதானா என்றால் சரியானது தான். தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தாத்தாவின் சுய சம்பாத்தியத்தை கொண்டு கிரையமாக பெற்ற சொத்து என்றால் சரிதான். தாவா சொத்துக்களை தவிர எனது தாத்தாவின் சொத்தை வேறு சொத்துக்கள் ஏதேனும் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள ஏ அட்டவணை சொத்து எனது பெரியப்பா ரெத்தினத்திற்கும், பி அட்டவணை சொத்து எனது தகப்பனார் ராமருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு பிரிக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, எனது தகப்பனாருக்கு பிரிக்கப்பட்ட சொத்தையும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வழக்குரை சொத்து விபரத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு பிரிந்த பி அட்டவணை சொத்தில் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்து ஏதேனும் இந்த வழக்கில் பாகப்பிரிவினை கேட்டுள்ளேனா என்றால் இல்லை. எதற்காக நான் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் பாகம் கேட்கவில்லை என்றால் எனது பெரியப்பாவிற்கு பிரிந்த சொத்துக்களை அவரது மற்ற உறவினர்கள் அனுபவம் செய்து வருவதால் அந்த சொத்தை பொறுத்து மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்து எனது கட்டுப்பாட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு எந்த ஆண்டு திருமணமானது என்றால் 1999 ல் நடைபெற்றது. நான் எந்த ஆண்டு பிறந்தேன் என்றால் 1969 ல் பிறந்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஏற்பட்ட பாகபிரிவினை படி தான் எனது தகப்பனாரும் பெரியப்பாவும் சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல, அனைத்து சொத்துக்களையும் எனது பெரியப்பா தான் பராமரித்து வந்தார். மேற்படி எனது பெரியப்பா சொத்துக்களை பராமரித்து வந்த காலக்கட்டத்தில் எனது தகப்பனார் எங்கு இருந்தார் என்றால் மத்தியபிரதேசத்தில் இருந்தார், மேற்படி சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் நானும் மத்தியபிரதேசத்தில் தான் இருந்தேன்.

3) வா.சா.ஆ.1 பாகப்பரிவினை ஏற்பட்ட காலக்கட்டத்தில் நான் பள்ளிபடிப்பு படித்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனக்கு 9 வயது இருக்கும். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் எனது தகப்பனாருக்கு தெரிந்து தான் பாகபிரிவினை செய்து கொண்டார் என்றால் சரிதான், எனது தகப்பனாருக்கு தெரியாமல் எப்படி கையொப்பம் செய்திருக்க முடியும். சாட்சி மீண்டும் தாமாக கையொப்பம் செய்த விபரம் எனக்கு தெரியாது என்று கூறுகிறார். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பெரியசாமி மற்றும் கருப்பாயி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் தாவா சொத்துக்கள் பெறப்பட்டது என்றால் சரிதான். பெரியசாமி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கேட்டால் தான் தெரியும். பெரியசாமி–கருப்பாயி தம்பதியருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனது பெரியப்பா ரெத்தினம், எனது தகப்பனார் ராமர், எனது அத்தைகள் கோவிந்தம்மாள், பொன்னம்மாள் மற்றும் சின்னம்மாள் ஆவார்கள். மேற்படி கோவிந்தம்மாள் மற்றும் சின்னம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கோவிந்தம்மாளுக்கு எத்ததனை வாரிசுகள் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை ஆனால் வாரிசுகள் இருக்கிறார்கள். சின்னம்மாளுக்கு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். பொன்னம்மாளுக்கு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் வாரிசுகள் இல்லை.